சுருக்கம்

சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை –தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் – பொதுக்குழு உறுப்பினர் மாற்றம் செய்வது – கலைமாமணி திருமதி.சுதா ரகுநாதன் அவர்களை உறுப்பினராக அரசு நியமனம் செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

சுற்றுலா மற்றும் பண்பாட்டு (பண்.2) த் துறை

அரசு ஆணை (1டி) எண்.42

நாள் 5.8.2008
திருவள்ளுவர் ஆண்டு 2039, ஆடி 21

படிக்க

1. அரசு ஆணை (டி) எண்.183, தமிழ் வளர்ச்சி, பண்பாடு மற்றும் அறநிலையத்துறை, நாள் 5.6.2006.
2. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்ற உறுப்பினர்–செயலாளரின் கடித எண்.4470 / உ.செ/ 2008, நாள் 1.7.2008.

+++

ஆணை:–

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் கீழ்க்காணும் நபர்களை தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றப் பொதுக் குழுவிற்கு, மன்ற அமைப்பு விதி 10 (அ) (4) ன்படி அரசு நியமன உறுப்பினர்ளாக அவ்வாணை வெளியிடப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டு காலத்திற்கு நியமத்து பொதுக்குழுவை மாற்றியமைத்து ஆணையிடப்பட்டது.

1) பேராசிரியை திருமதி.சாரதாநம்பி ஆரூரன்
2) கவிஞர் திரு.ஈரோடு தமிழன்பன்
3) திரு.க.திருநாவுக்கரசு
4) திருவாளப்புத்தூர் திரு.டி.ஏ.கலியமூர்த்தி
5) திருமதி.நித்யஸ்ரீ மகாதேவன்
6) திருமதி.ஸ்ரீகலா பரத்
7) கவிஞர் திரு.சுப்பு ஆறுமுகம்
8) திருமதி.ஸ்ரீபிரியா
9) திரு.குமரிமுத்து

2) மேற்கண்ட பொதுக்குழுவின் உறுப்பினரான திருமதி.ஸ்ரீகலா பரத் அவர்கள் பதவி விலகியுள்ளதால், அன்னாரின் பதவி விலகல், மன்றத் துணை விதிகள் கூறு 11(2) இன்படி, 25.6.2008 தேதியில் நடைபெற்ற மன்ற செயற்குழுக் கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு, பின்னர் நடைபெற்ற பொதுக்குழுக் கூட்டத்தில் திருமதி.ஸ்ரீகலா பரத் அவர்கட்கு பதிலாக குரலிசைக்

கலைஞர் கலைமாமணி திருமதி.சுதா ரகுநாதன் அவர்களை மன்றப் பொதுக்குழுவில் அரசு நியமன உறுப்பினராக நியமனம் செய்ய தீர்மானிக்கப்பட்டு, இதற்கான அரசாணையை வெளியிடுமாறு மன்ற உறுப்பினர்–செயலாளர் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

3) தமிழ்நாடு இயல் இசை நாடக மன்ற உறுப்பினர்–செயலாளரின் கருத்துருவை கவனமுடன் அரசு ஆய்வு செய்து அதனை ஏற்று, மன்ற பொதுக் குழுவில் வரிசை எண்.6 ல் உறுப்பினராக இடம் பெற்றிருந்த திருமதி.ஸ்ரீகலா பரத் அவர்களுக்குப் பதிலாக குரலிசைக் கலைஞர் கலைமாமணி திருமதி.சுதா ரகுநாதன் அவர்களை மன்ற அமைப்பு விதிகள் கூறு எண். 10 (அ) (4) ன்படி மன்றப் பொதுக்குழு உறுப்பினராக நியமித்து அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

வெ.இறையன்பு
அரசு செயலாளர்

பெறுநர்
தலைவர், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், சென்னை.28
உறுப்பினர்–செயலாளர், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், சென்னை.28
கலைமாமணி திருமதி.சுதா ரகுநாதன், குரலிசைக் கலைஞர்
(தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மூலமாக)
மன்றப் பொதுக்குழுவின் அனைத்து உறுப்பினர்கள்
(தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மூலமாக)
ஆணையர் (பொ), கலை பண்பாட்டு இயக்ககம், சென்னை.28

நகல்
செயலாளர், சுற்றுலா (ம) பண்பாட்டுத்துறை, சென்னை.9
துணைச் செயலாளர், நிதித்துறை, சென்னை.9
முதலமைச்சர் அலுவலகம், சென்னை.9
இ.கோ / உதிரி

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்